
# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. முருகேசன்
முனைவர் சு. இராமலிங்கம்

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


## International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

45. **வா. காருண்யா** 228
இலக்கண இலக்கிய நெறிகளில் ந. சுப்புரெட்டியாரின் குயில்பாட்டு

46. **சி. செந்தில் வடிவு** 233
புரட்சிச் சிந்தனையும் புதுப் பார்வையும்

47. **அ. திலிப் ஏங்கல்ஸ்** 239
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிமணியின் திறனாயுந் திறன்

48. **கௌரி** 243
அருங்கலைக்கோனின் அறிவியல் நோக்கு

49. **முனைவர் இரா. ஜெகதீசன்** 248
தலைநாள் கொண்ட கோலங்கள்

50. **முனைவர் மு. நாகராஜன்** 252
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பட்டினத்தடிகள்

51. **மு. பாண்டிச்செல்வி** 257
பிரபந்தத்தில் ஆழ்வார்களின் பக்தி

52. **கீ.சு. தமிழரசி** 263
ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

53. **முனைவர் வி. வசுமதி** 267
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவி(ன்)மணி

54. **முனைவர் செ. ஆறுச்சாமி** 272
ந. சுப்புரெட்டியார் பார்வையில் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

55. **முனைவர் ந. இரஞ்சன்** 278
ந. சுப்புரெட்டியாரின் திணைமயக்கத்தில் மயக்கநிலை

56. **திருமதி. சு. பாத்திமா** 284
ந.சுப்புரெட்டியாரின் 'தமிழ்க்கடல் இராய.சொ.

57. **இர. ஜோதிமீனா** 290
வாழும் கவிஞர்கள் : ந. சுப்புரெட்டியார் பார்வை

58. **முனைவர் ம. கீதா** 295
ந. சுப்புரெட்டியாரின் தமிழ் இலக்கியங்களில் காட்டும் நீதி

59. **ஆ. நித்யா** 301
தொல்காப்பியம் காட்டும் திருமண முறைகளும் இல்லறவொழுக்கமும்

60. **முனைவர் க. பழனிவேல்** 307
பன்முக நோக்கில் 'என் அமெரிக்கப் பயணம்'

# 55. ந. சுப்புரெட்டியாரின் திணைமயக்கத்தில் மயக்கநிலை

முனைவர் ந. இரஞ்சன்
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## தொடக்கவுரை

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள்)*

இலக்கியம், இலக்கணம், பக்தி, மெய்ப்பொருள் எனப் பல்துறை அறிவு கொண்டவராகத் திகழ்வதோடு, அத்துறைகள் சார்ந்த பல்வேறு நூல்களைப் படைத்துத் தமிழர்களுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தவர் ந. சுப்புரெட்டியார். இவர் தொடாத துறைகளே இல்லை என்றுகூடக் கூறலாம். அந்த அளவிற்கு அவருடைய நூல்களில் எண்ணற்ற பதிவுகள் காணக் கிடைக்கின்றன. அகத்திணைக் கொள்கைகள் என்னும் அவருடைய நூலில் திணைமயக்கம் குறித்தும் பேசியுள்ளார். அந்தத் திணைமயக்கம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## திணை

திணைமயக்கம் என்பது இங்கு அகத்திணை மயக்கத்தைக் குறிக்கிறது. அகத்திணையுள் கைக்கிளை, பெருந்திணை இரண்டுக்கும் நிலம் இல்லை. அதனால் இவை இரண்டும் மற்ற ஐந்து அகத்திணைக்குள் கலந்து நிற்கும். அதனால்தான் அவ்விரண்டு அகத்திணைகள் பற்றி இங்கு ஆராயப்படவில்லை. திணைமயக்கத்தைப் பார்க்கும் முன்பு, திணை என்ற சொல்லுக்குரிய பொருளைப் பார்த்தல் அவசியமாகிறது.

திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்ற ஒரு பொருளை மட்டும் எடுத்துக் கொள்வதால் தான் மயக்கநிலை ஏற்படுகிறது. நம் மொழியில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டும்தான் இருக்கிறது என்று கொள்வதில்லை. ஏனெனில் ஒரு பொருட் பன்மொழிகள் தமிழில் நிறைந்து காணப்படுகின்றன. தொல்காப்பிய இடையியல் மற்றும் உரியியல் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. 'திணை என்பதற்கு நிலம்; குலம்; இடம்; வீடு; ஒழுக்கம்' என்றெல்லாம் மு.சண்முகம் பிள்ளை தம்முடைய அகரமுதலியுள் பொருள் சுட்டியுள்ளார். 'திண்ணிதான நிலத்தையே முதலில் திணை என்னும் சொல் குறித்தது. பிறகு இச்சொல் அந்நிலத்தில் பிறந்த குலத்தினரை, குடியினரைக் குறிக்கலாயிற்று. அதன்பின் அம்மக்களின் ஒழுக்கத்தையும்